# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

### பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் — செயற்றிட்டம் — 3

**ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளினால் நிதியிடப்பட்டது**

**கொழும்பு மாநகர சபையின் தெற்குதிசை நீர்த்தேக்க பிரதேசத்தில் தற்போதுள்ள கழிவு நீர் வடிகால்களின் புதுப்பித்தல்**

**ICB Contract No.: GCWWMIIP-P2/EIB/SR**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கியிடமிருந்து கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் நிதிகளின் பகுதியொன்றை மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுத் தலைவர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் (இதன் பின்னர் தொழில் வழங்குநர் என அழைக்கப்படும்) சார்பாக இரு பாகங்களாக பூர்த்தி செய்யப்படவுள்ளதும் கீழே சுருக்கமான விபரிக்கப்பட்டுள்ள நோக்கத்திற்கான மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   திறந்த பாகத்துடனான (2.1 கி.மீ) முறைமைகள் மற்றும் பெரிய அளவிலான அகழிகளை பாவித்து, (4.5 கி.மீ) கழிவு நீர் வடிகால் புணரமைத்தல். மொத்த நீளமானது 6.6 கி.மீ முதல் 90 மி.மீ. விட்டமுடைய VC தொடக்கம் 600 மி.மீ. விட்டமுடைய VC வரையும் மற்றும் 1000 மி.மீ. விட்டமுடைய RC முதல் 1400 மி.மீ விட்டமுடைய RC குழாய்களாக இருத்தல் வேண்டும். தற்போதுள்ள CCTV கண்கானித்தல் அடங்கலாக மற்றும் தற்போதுள்ள கழிவு நீர் வடிகால் தொகுதிகளை புதிய கழிவு நீர் வடிகால்/ வீட்டு இணைப்புக்களுடன் பரிமாற்றம் செய்தல்.
3. ஒரு-கட்ட-இரு-தபாலுறைக்கமைவான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுமென்பதுடன் அனைத்து நாடுகளிலிருந்தும் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் கையேற்பதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்து எந்தவொரு மேலதிக தகவலையும் கொழும்பு-7, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, 86 ஆம் இலக்கத்திலுள்ள பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: (94)(11) 2665331, 5736015 அல்லது 2665325. மின்னஞ்சல்: pdgcwmp@sltnet.lk
5. மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கை ரூபா 100,000 (ஒரு இலட்சம்) அல்லது 500 ஐ.அ.டொலரை ரொக்கப் பணத்தில் மேலேயுள்ள முகவரியில் செலுத்தலாம் அல்லது விலைமனுப் பெயரைக் குறிப்பிட்டு மக்கள் வங்கி நகர சபைக் கிளையிலுள்ள 167-1001-8-9026033 என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்பிலிடப்பட்டு மேலேயுள்ள முகவரிக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுதாரரினால் அவரது நாட்டில் முன்னரே போக்குவரத்து ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், வேண்டுகோளுக்கிணங்க, பணவரவு மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் சான்று பகருவதற்காக அவைகளை தூதஞ்சல் வழியாக அனுப்பலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒப்படைத்தலுக்கான பொறுப்பை தொழில் வழங்குநர் ஏற்றுக் கொள்ள மாட்டார்.
6. மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் 25 மார்ச் 2021ஆம் திகதியன்று மு.ப. 9 மணிக்கு தளவிஜயமொன்று ஆரம்பமாகி நடாத்தப்படும். விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று அதே நாளில் பி.ப. 2.30 மணிக்கு மேலே உள்ள 4ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் நடைபெறும். இரு நிகழ்வுகளிலும் சமுகமளிக்குமாறு விலைமனுதாரர் நன்கு அறிவுறுத்தப்படுகின்றனர்.
7. அனைத்து தொழில்நுட்ப விலைமனுக்களும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் நிருணயிக்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் (விலைமனு தரவு தாளின் 2 ஆம் பிரிவு).
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து விலைமனுக்கள் 203 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுப்பிணையானது 231 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கமைவாக உருமாதிரிகளில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள் 27 ஏப்ரில் 2021ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு, (பிரதான கணக்காளரின் கவனத்திற்கு) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, இல. 330, யூனியன் இடம், கொழும்பு-02, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ''கேள்விப் பெட்டியில்'' சேர்க்கப்படல் வேண்டும்.
10. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தொழில்நுட்ப விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் முன்னிலையில் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மேலேயுள்ள இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
11. விலைமனுக்களை தயாரித்தல், விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளித்தல் மற்றும் அவற்றின் ஒப்படைத்தலில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சானது பொறுப்பேற்க மாட்டாது.

**செயலாளர்,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள்**
**இராஜாங்க அமைச்சு.**